**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | | | |
|---|---|---|---|
| Case No: | | SC.No. 134/2025 | |
| Prosecution Witness: | | PW-3/W-3 | |
| Name: | திரு. ஏழுமலை | Taluk: | செந்துறை |
| S/o. | திரு. செல்லப்பெருமாள் | Age: | 62 |
| Occupation: | விவசாயம் | Village: | நந்தியங்குடிக்காடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **29.07.2026 By Thiru. P. Anbumani, Translator.**

(எதிரி முன்னிலையானார்.)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மேலேக்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் நேற்று என்னை சம்மன் கொடுக்கும்போதுதான் விசாரித்தார்கள். இதற்கு முன்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியானவர் முன்பு புலன் விசாரணை அதிகாரியிடம் அளித்த வாக்குமூலத்திற்கு மாறாக சாட்சியமளித்துள்ளதால் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து**

**அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், நான் அந்த விசாரணையில், கடந்த 10.10.2023 ம் தேதியன்று அசாவீரன்குடிக்காடு கிராமத்தில் உள்ள எதிரியின் பெட்டிக்கடையில் மதியம் ஹான்ஸ் பாக்கெட் வாங்கிக்கொண்டு இருந்ததாகவும், அப்போது அங்கு வந்த குவாகம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை ஏன் இங்கு நிற்கிறாய் என்று விசாரித்தபோது ஹான்ஸ் வாங்குவதற்காக வந்தேன் என்று கூறினேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**ஒப்பம்.மணிமேகலை,L.L.M.,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**அரியலூர்,**